# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 11 (2009 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 16)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதல்)

1. திருத்தூதர் பணிகள் என்னும் நூலை எழுதியவர் ? லூக்கா
2. யூதாசுக்குப் பதிலாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டது யார்? மத்தியா.
3. பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவி அப்போஸ்தலர்கள்மீது எவ்வடிவில் இறங்கி வந்தது? நெருப்பு வடிவில்.
4. பெந்தக்கோஸ்து என்னும் சொல்லுக்கு பொருள் என்ன? 50வது நாள் என்பது பொருள்.
5. கால் ஊனமுற்ற ஒருவர், பேதுருவால் குணமடையும் பொழுது, அவர் எங்கே இருந்தார்? கோவிலில் "அழகுவாயில்" என்னும் இடத்தில் இருந்தார்.
6. சைப்பிரசு தீவைச் சேர்ந்த யோசேப்பு என்பவருக்கு, திருத்தூதர்கள் வழங்கிய பெயர் என்ன? பர்ணபா
7. பர்ணபா என்னும் பெயருக்கு பொருள் என்ன? ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்
8. பேதுருவிடம் பொய் சொல்லி மரிந்த இருவரின் பெயர் என்ன? அனனியா, சப்பிரா.
9. திருத்தூதர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்ட ஏழு பேர் யாவர்? ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கானோர், சீமோன், பர்மனா, அந்தியோக்கிய நகரத்து நிக்கொலா
10. ஸ்தேவான் மீது கல் எறிந்த போது அவர் செய்த செபம் என்ன? "ஆண்டவராகிய இயேசுவே! எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும். ஆண்டவரே! இந்தப்பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதேயும்."
11. சவுல் தமஸ்கு நகர் அருகில் தரையில் விழும் பொழுது, அவர் கேட்ட குரல் ஒலி என்ன? "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்".
12. சவுல் மீண்டும் பார்வை பெற்றது எப்பொழுது? அனனியா சவுல்மீது கைகளை வைத்தபொழுது.
13. சவுலை திருத்தூதர்களிடம் அறிமுகம் செய்தது யார்? பர்ணபா.
14. லித்தாவில் பேதுரு செய்தது என்ன? முடக்குவாதத்தால் படுக்கையில் கிடந்த ஐனேயாவைக் குணப்படுத்தினார்.
15. பேதுரு யோப்பா நகரில் உயிர்ப்பித்த பெண்ணின் பெயர் என்ன? தபித்தா
16. செசாரியா நகரில் தங்கியிருந்த நூற்றுவர் தலைவரின் பெயர் என்ன? கொர்னேலியு.
17. கொர்னேலியுவின் இல்லத்தில் நடந்தது என்ன? பேதுரு இயேசுவைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவருடைய சொற்களைக் கேட்ட அனைவர் மீதும் தூய ஆவி இறங்கி வந்தது.
18. இயேசுவின் சீடர்கள் கிறிஸ்த்தவர்கள் என்று முதல் முறையாக எங்கு அறிவிக்கப்பட்டது? அந்தியோக்கியாவில்.
19. உலகமெங்கும் கொடிய பஞ்சம் ஏற்படப் போகிறது என்று முன்னுரைத்தது யார்? அகபு
20. யாக்கோபை வாளால் கொன்றது யார்? ஏரோது.
21. பேதுருவை கைது செய்யக் கட்டளை இட்டது யார்? ஏரோது
22. பேதுருவை சிறையில் இருந்து விடுவித்தது யார்? ஆண்டவரின் தூதர்.
23. சிறையிலிருந்து வானதூதரால் விடுவித்த பேதுருவிற்கு வாயில் கதவைத் திறந்து விட்டது யார்? ரோதி என்னும் பணிப்பெண்.

24. பேதுரு சிறையில் இருந்து எங்கே சென்றார்? மாற்கு எனப்படும் யோவானின் தாயாகிய மரியாவின் வீட்டுக்குப் போனார்.
25. சவுலும் பர்ணபாவும் எருசலேமில் இருந்து அந்தியோக்கியாவுக்கு திரும்பிச் செல்லும் பொழுது, அவர்கள் யாரை தங்களுடன் கூட்டிச் சென்றனர்? மாற்கு எனப்படும் யோவானை.
26. சைப்பிரசுக்கு பயணம் செய்தவர் யாவர்? சவுல், பர்ணபா, மாற்கு
27. பவுல் கால் ஊனமுற்றவரைக் குணப்படுத்தியது எங்கே? லிஸ்திராவில்
28. பவுல் தனது 2ம் தூதுரைப் பயணத்தில், தன்னோடு யாரைக் கூட்டிச் சென்றார்? சீலாவைக் கூட்டிச் சென்றார்.
29. பிலிப்பில் பவுல் யாருக்கு திருமுழுக்கு வழங்கினார்? லீதியா என்பவருக்கு
30. வேற்றுத் தெய்வங்களுக்கு பீடம் அமைத்திருப்பதை பவுல் எங்கே கண்டார்? ஏதென்சில்
31. பவுல் கொரிந்து நகரில் யாரைச் சந்தித்தார்? அக்கிலாவையும் பிரிஸ்கில்லாவையும்
32. கொரிந்து நகரில் திருமுழுக்குப் பெற்ற தொழுகைக் கூடத் தலைவர் யார்? கிறிஸ்பு
33. எபேசில் பவுல் கிறிஸ்தவர்களுக்கு செய்தது என்ன? அவர் அவர்கள் மீது கைகளை வைத்து தூயஆவியை அவர்கள் மேல் இறங்கச் செய்தார்.
34. பவுல் லூக்காவை எங்கே சந்தித்தார்? துரோவாவில்.
35. எதிர்நோக்கின் திருப்பயணிகள் யூபிலி ஆண்டின் சிறப்பு இலட்னையில் எத்தனை மனிதர்கள் உள்ளனர்? 4
36. எதிர்நோக்கின் திருப்பயணிகள் யூபிலி ஆண்டின் சிறப்பு இலட்னையில் உள்ள நங்கூரம் எதனைக் குறிக்கின்றது? அலைகளுக்குள் இறக்கப்பட்டுள்ள நங்கூரம் அலை போன்ற துன்பத்திற்குள் இறக்கப்படும் போது ‘‘எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது”
37. எதிர்நோக்கின் திருப்பயணிகள் யூபிலி ஆண்டின் சிறப்பு இலட்னையில் உள்ள வளைந்த சிலுவை எதனைக் குறிக்கின்றது? கடவுளின் இரக்கம் எப்போதும் நம்மீது இருக்கிறது. நாம் நம்பிக்கையுடன் அவரண்டை போகும் போதெல்லாம் அவர் நம் சார்பாக (இருக்கிறார்) வளைந்து வருவார் என்பதை வளைந்த சிலுவை வெளிப்படுத்துகின்றது.
38. ஓர் இரவில் இயேசுவிடம் வந்து ‘ரபி நீர் கடவளிடமிருந்து வந்த போதகர்’’ என்று கூறியவர் யார்? நிக்கோதேம்
39. ‘‘நான் மெசியா அல்ல, அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவர்’’ என்று கூறியவர் யார்? திருமுழுக்கு யோவான்
40. ‘‘ஐயா நீர் ஒரு இறைவாக்கினர் என்று கண்டுகொண்டேன்’’ எனக் கூறியவர் யார்? சமாரியப் பெண்
41. ‘‘நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்குமே என்றுமே தாகம் எடுக்காது’’ என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது? இயேசுவால் சாமாரியப் பெண்ணுக்கு
42. இயேசு தன் தாயிடமும், அன்புச் சீடர் யோவானிடமும் கூறியது என்ன? தம் தாயிடம் ‘‘அம்மா இவரே உன் மகன்” என்றார். தம் சீடரிடம் ‘‘உன் தாய்” என்றார்.
43. இயேசு சிலுவையில் இருந்து கூறிய கடைசி வார்த்தை என்ன? ‘‘எல்லாம் நிறைவேறிற்று”
44. இயேசு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவியபின், அவர்களுக்கு கூறியது என்ன? ‘‘ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்’’
45. இயேசு தன் சீடர்களுக்கு அளித்த புதிய கட்டளை என்ன? ” நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்”
46. லூக்கா என்பவர் யார்? புனித பவுலின் சீடர்.

47. இந்நற்செய்தியை லூக்கா எம் மொழியில் எழுதினார்? கிரேக்க மொழியில்.
48. இந்நூலை லூக்கா யாருக்கு எழுதுகிறார்? தியோபில் என்பவருக்கு (1:3)
49. தூய லூக்காவின் ஆற்றல்கள் எவை? மருத்துவர், ஓவியர், வரலாற்று ஆசிரியர்.
50. செபத்தின் நற்செய்தி, ஏழைகளின் நற்செய்தி எனப்படும் நற்செய்தியை எழுதியவர் யார்? தூய லூக்கா.
51. செக்கரியா என்னும் குருவானவர் எந்த வகுப்பைச் சார்ந்தவர்? அபியா வகுப்பைச் சார்ந்தவர்.
52. எலிசபேத்து என்பவர் யார்? சக்கரியாவின் மனைவி.
53. ஆண்டவருடைய வார்த்தைகளை நம்பாத சக்கரியா, எவ்வாறு தண்டிக்கப்பட்டார்? அவர் பேச்சற்றவராய் இருந்தார்.
54. கபிரியேல் வானதூதர் மரியாவுக்கு அறிவித்தது என்ன? மரியா கடவுளின் அருளை அடைந்துள்ளார் எனவும், கருவுற்று ஒரு மகனைப் பெறுவார், அவருக்கு இயேசு என்னும் பெயரிடப்படும் ' உன்னத கடவுளின் மகன் எனப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.
55. மரியா எலிசபேத்தோடு எத்தனை மாதங்கள் தங்கியிருந்தார்? ஏறக்குறைய மூன்று மாதம்.
56. தம் பேரரசு முழுவதிலும், மக்கள் தொகை கணக்கெடுக்குமாறு கட்டளையிட்ட மன்னன் பெயர் என்ன? ஆகஸ்து சீசர்.
57. யோசேப்பு எந்த குடும்பத்தைச் சார்ந்தவர்? தாவீது குடும்பத்தைச் சார்ந்தவர்.
58. இயேசு எங்கே பிறந்தார்? பெத்தலேகெம்.
59. இயேசுவின் பிறப்பைப் பற்றி வானதூதர்கள் யாருக்கு அறிவித்தனர்? இடையர்களுக்கு.
60. குழந்தைக்கு எப்பொழுது பெயரிடப்பட்டது? குழந்தை பிறந்து எட்டாம் நாள்.
61. இயேசுவைக் கோவிலில் ஒப்படைக்கும் பொழுது, இயேசுவைப்பற்றி பேசிய பெண் யார்? அன்னா.
62. அன்னாவுக்கு அப்பொழுது என்ன வயது? 84 வயது.
63. இக்குழந்தை பிறஇனத்தார்க்கு வெளிப்பாடு, அருள், ஒளி எனக் கூறியது யார்? சிமியோன்.
64. அக்காலத்தில் யூதேயாவில் மன்னராக இருந்தது யார்? ஏரோது.
65. இயேசு கோவிலில் காணாமல் பொழுது, அவருக்கு வயது என்ன? 12வயது.
66. திருமுழுக்கு யோவான் எக்காலத்தில் இயேசுவை முன்னறிவித்தார்? அன்னாவும், கயபாவும் தலைமைக் குருக்களாய் இருந்த பொழுது.
67. இயேசு தம் பணியை தொடங்கிய போது அவருக்கு வயது என்ன? 30 வயது.
68. இயேசுவின் வளர்ப்பத் தந்தை யோசேப்பு யாருடைய மகன்?ஏலியின் மகன்.
69. இயேசு திருமுழுக்கு பெறும் பொழுது, தந்தை கடவுள் கூறியது என்ன? ”என் அன்பார்ந்த மகன் நீயே! உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.
70. இயேசு பாலை நிலத்தில் எத்தனைமுறை அலகையால் சோதிக்கப்பட்டார்? மும்முறை.
71. சீமோன் பேதுறுவின் வீட்டில் இயேசு செய்த புதுமை என்ன? சீமோன் பேதுறுவின் மாமியாரை, இயேசு குணமாக்கினார்.
72. முடக்குவாதமுற்றவரைப் பார்த்து இயேசு கூறியது என்ன? ”உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன”என்றார்.
73. லேவி என்பவர் யார்? அவர் ஒரு வரி தண்டுபவர்.
74. இயேசு தேர்ந்தெடுத்த பன்னிருவரின் பெயர்களைக் கூறுக? பேதுறு என்னும் சீமோன், சீமோனின் சகோதரர் அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தலேமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோப்பு, தீவிரவாதி எனப்பட்ட சீமோன், யாக்கோபின் மகன் யூதா, துரோகியாக மாறிய யூதாஸ்
75. திருமுழுக்கு யோவானைப் பற்றி இயேசு கூறியது என்ன? ‘‘மனிதராய்ப் பிறந்தவர்களுள், யோவானைவிடப் பெரியவர் ஒருவருமில்லை” என்றார்.

76. நூற்றுவர் தலைவன் இயேசுவிடம் கூறியது என்ன? ‘‘ஐயா, உமக்கு தொந்தரவு வேண்டாம்’’ நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன்”என்றார்
77. நயீன் ஊர் கைம்பெண்ணின் மகனை இயேசு என்ன கூறி உயிர் பெறச் செய்தார்? ‘‘இளைஞனே! நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திரு” என்றார்.
78. இயேசுவால் ஏழு பேய்கள் நீங்கப் பெற்ற பெண்ணின் பெயர் என்ன? மகதலா மரியா.
79. இயேசுவின் பெண் சீடர்கள் யாவர்? மகதலா மரியா, கூசாவின் மனைவி யோவன்னாவும், சுசன்னாவும்.
80. ‘‘வானத்திலிருந்து தீ வரவழைத்து சமாரியாவை அழிக்கலாமா?’’ என இயேசுவைக் கேட்டவர்கள் யாவர்? யாக்கோபும், யோவானும்.
81. தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் எத்தனை சீடர்களை அனுப்பினார்? 72 சீடர்களை
82. நல்ல சமாரியன் உவமையில் அடிபட்டுக்கிடந்த சமாரியரைக் கண்டு, மறுபக்கமாகச் திரும்பிச் சென்றவர்கள் யாவர்? லேவியரும், குருவும்.
83. ”எந்த வீட்டு வேலையாளரும், இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது”என்னும் வசனத்தில், குறிப்பிடப்படும் இரு தலைவர்கள் யாவர்? கடவுளும், செல்வமும்.
84. செல்வந்தரின் வீட்டு வாயில் அருகே அமர்ந்திருந்த ஏழை யார்? இலாசர்.
85. இயேசு எருசலேமுக்கு போகும் வழியில், எத்தனை தொழுநோயாளர்களைக் குணப்படுத்தினார்? 10 தொழுநோயாளர்களை.
86. சக்கேயு இயேசுவைக் காண்பதற்காக எந்த மரத்தில் ஏறினார்? ஒரு காட்டு அத்தி மரத்தில்.
87. சீசருக்கு கப்பம் கட்டுவது முறையா? இல்லையா? என்ற கேள்விக்கு இயேசு அளித்த பதில் என்ன? ‘‘சீசருக்கு உரியவற்றை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்”என்று சொன்னார்.
88. இயேசு கைது செய்யப்பட்டது யாரால்? யூதர்களால்.
89. இயேசு கைது செய்யப்பட்டு எங்கு அழைத்துச் செல்லப்பட்டார்? தலைமைக் குருவின் வீட்டிற்கு.
90. இயேசு கைது செய்யப்பட்டு தலைமைக் குருவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரைப் பின்தொடர்ந்த திருத்தூதர் யார்? பேதுரு.
91. பேதுரு இயேசுவை தெரியாது என்று கூறுவார் என இயேசு கூறிய விடயம் நிறைவேறியது எந்த இடத்தில்? தலைமைக் குருவின் வீட்டில்.
92. பேதுரு இயேசுவை தெரியாது என்று எத்தனை தடவைகள் மறுதலித்தார்? 3 முறை.
93. இயேசுவை சூழ்ச்சியாக பிடித்து கொலை செய்ய ஆலோசித்தவர்கள் யாவர்? கயபா, தலைமைக்குருக்கள், மக்களின் மூப்பர்கள்
94. இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாசு பெற்ற கூலி என்ன? 30 வெள்ளிக்காசுகள்
95. இயேசுவிற்கு பதிலாக விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதி யார்? பரபாஸ்.
96. இயேசுவிற்கு சிலுவை மரணத் தீர்ப்பைத் தந்தது யார்? ஆளுநர் பிலாத்து.
97. இயேசு சிலுவை சுமந்து கொண்டு செல்லும் போது இயேசுவுக்காக அழுத எருசலேம் மகளிரை நோக்கி, அவர் கூறியது என்ன? ”எருசலேம் மகளிரே! நீங்கள் எனக்காக அழ வேண்டாம்’ மாறாக உங்களுக்காகவும், உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்”என்றார்.
98. எம்மாவுஸ் சென்ற சீடர்களுள் ஒருவரின் பெயர் என்ன? கிளையோபா.
99. திமிர் வாதக்காரனை எத்தனை பேர் சுமந்து கொண்டு வந்தார்கள்? 4 பேர்
100. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? பதினான்காம் லியோ

## பேச்சுப்போட்டி

## நற்கருணை ஒற்றுமையின் அருளடையாளம்

நம்மிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்காக இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். நற்கருணை திருவிருந்தில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும் கிறிஸ்துவை உணவாக உட்கொள்கிறோம். அவருடைய மறையுடலில் இணைக்கப்படுகிறோம். ஆதலால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும். நம்மிடையே சாதி, இனம், மொழி அடிப்படையில் பிளவுகளோ ஏற்றத்தாழ்வுகளோ இருக்கக் கூடாது.

திருப்பலியில் பயன்படுத்தப்படும் அப்பமும் இரசமும் நம்மிடையே விளங்க வேண்டிய ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன. பல கோதுமை மணிகள் ஒன்று சேர்ந்து அப்பம் உருவாகிறது; பல திராட்சைப் பழங்கள் ஒன்றாகப் பிழியப்பட்டு இரசம் உருவாகிறது. அது போன்று, நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கு பெறும் நாம் பலராயினும் அனைவரும் ஒரே சமூகமாகிறோம்; ஒருவரோடு ஒருவர் இணைக்கப்படுகிறோம். திருப்பலியில் பங்கு கொள்ளும் நாம் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதற்காகத்தான் திருப்பலியின் தொடக்கத்தில், இறைவனுக்கும் அயலாருக்கும் எதிராகச் செய்த குற்றங்களுக்காக மனம் வருந்துகிறோம். இறைவனிடமும் திருப்பலியில் பங்கேற்கும் அனைவரிடமும் மன்னிப்பு வேண்டுகின்றோம். அனைவரும் ஒன்று சேர்ந்து, இயேசு கற்றுத்தந்த செபத்தைச் சொல்கிறோம். நற்கருணை உட்கொள்ளுவதற்கு முன் நாம் ஒருவருக்கொருவர் அமைதியின் வாழ்த்தை அறிவித்துக் கொள்கிறோம்.

“அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம். (1கொரிந்தியர் 10:17)

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மையே இப்போதே
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர் தானே

நாங்கள் தந்த காணிக்கை எல்லாம்
இரட்சகர் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த்துளி எல்லாம் பூமி கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாது

ஆலயத்தின் வாசல் வந்தால் அழுகை வருகுதே
ஆனமட்டும் அழுதுவிட்டால் அமைதி பெருகுதே
கண்ணீரைப் போல காணிக்கை இல்லை
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
கண்ணீரின் அர்த்தங்கள் நீர் தானே

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

**இயேசு புயலை அடக்கியது**